DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 118/2014

PROSECUTION WITNESS No - PW- 7

| | | | |
|---|---|---|---|
| Name : | முத்துவயிறு | Caste: | |
| Father Name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26 th day of March 2026.

4 வது, 6 வது மற்றும் 9 வது எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர். 2 வது எதிரி நீதிமன்ற காவலிலிருந்து காணொளி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார்.

<u>முதல் விசாரணை :</u>

எனக்கு சொந்த ஊர் ஒய்யவந்தான் பேச்சாத்தாங்குடி கிராமம் ஆகும். இவ்வழக்கில் இறந்து போன ஜெகசுப்பிரமணி (எ) பழனியை தெரியும். இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். இவ்வழக்கு சம்பவம் நடந்த நாளில் நான் மதுரையில் இருந்தேன். இவ்வழக்கு தொடர்பாக எந்த நிகழ்வும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. இதற்குமுன் மூல வழக்கு எண். 5/2005 ல் இதே நீதிமன்றத்தில் நான் சாட்சி அளித்தபோது என்ன விவரம் கூறினேன் என்றால் நான் தற்போது கூறும் செய்தியைதான் அப்போதும் கூறினேன்.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அனுமதியின் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இவ்வழக்கு தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தபோது கடந்த 13.06.2000 ம் அன்று மதியம் சுமார் 1.45 மணியளவில் அரியாகுறிச்சியில் இருந்து ஒய்யவந்தானுக்கு சென்று கொண்டிருந்த போது ரோட்டின் மேற்குபுறம் இலுப்பக்கோட்டைக்கு செல்லும் பாதையில் மெயின் ரோட்டில் எனக்கு எதிரே எங்கள் ஊரைச் சார்ந்த பன்னீர் செல்வம்

என்பவரின் சிகப்பு கலர் டிராக்டர் TN H 4347 மற்றும் அதன் டிரெய்லர் TN 32 Y 2853 என்ற வாகனத்தில் இலுப்பக்கோட்டை கண்மாய்க்கு செல்லும் பாதையில் மேற்கு பக்கமாக திரும்பிய நிலையில் அந்த டிராக்டரில் எதிரிகள் பன்னீர் செல்வம் அவரது மகன் காளீஸ்வரன் தம்பி ராமு ஆகியோர்கள் தங்கள் கைகளில் அரிவாளுடனும் பன்னீர் செல்வத்தின் மற்ற தம்பிகளான மணி, முத்து ஆகியோர்கள் தங்கள் கைகளில் கத்திகளுடனும் பச்சைபிள்ளை தன் வலது கையில் சைக்கிள் செயினை சுற்றி வைத்திருந்த நிலையிலும் ஸ்டாலின், கோபு ஆகியோர்கள் கைகளில் உருட்டுக்கட்டைகளுடனும் நின்றவாறு இருந்த நிலையில் மேற்குறிப்பிட்ட வாகனத்தை அய்யப்பன் ஓட்டிக்கொண்டு இலுப்பக்கோட்டை வண்டிப் பாதையில் மேற்கு நோக்கி சென்று விட்டார் என்றும் எங்கள் ஊர் ஜெகசுப்பிரமணி (எ) பழனி யை அவர்கள் வைத்திருந்த ஆயுதங்களால் தாக்கி கொலை செய்துவிட்டும் இவ்வழக்கின் சாட்சி சுதாகர் என்பவரை மேற்குறிப்பிட்ட எதிரிகள் வெட்டி காயப்படுத்திவிட்டும் தப்பித்து சென்றுள்ளார்கள் என்ற விவரம் நான் தெரிந்து கொண்டேன் என்றும் இவ்வழக்கில் பஞ்சாயத்து பணத்தை பன்னீர் செல்வம் கையாடல் செய்ததாலும் ஊர் பொதுக்கிணற்றில் பன்னீர் செல்வம் பொதுப்பயன்பாட்டு தண்ணீரை தன் செங்கல் சூளைக்கு பயன்படுத்தியதாலும் அதை தட்டிக்கேட்ட ஜெகசுப்பிரமணி (எ) பழனி மீது வன்மம் கொண்டு இந்நிகழ்ச்சி நடந்தது என்று போலிசார் விசாரணையில் நான் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.26 15:42:14 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 118/2014

PROSECUTION WITNESS No - PW- 8

| | | | |
|---|---|---|---|
| Name : | திருநாவுக்கரசு | Caste: | |
| Father Name/ | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26 th day of March 2026.

4 வது, 6 வது மற்றும் 9 வது எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர். 2 வது எதிரி நீதிமன்ற காவலிலிருந்து காணொளி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார்.

முதல் விசாரணை :

எனக்கு சொந்த ஊர் மரவமங்களம் கிராமத்தை ஒட்டியுள்ள வேலாரேந்தல் கிராமம் ஆகும். நான் காளையார்கோவிலில் சிவகங்கை ரோட்டில் வெல்டிங் வொர்க் ஷாப் வைத்து தொழில் செய்து வருகிறேன். இவ்வழக்கு தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் இவ்வழக்கு தொடர்பாக விசாரித்தார்களா என்றால் இல்லை. இங்கு என்னிடம் காட்டப்படும் ராமு என்பவர் கொடுத்ததாக சொல்லும் ஒப்பதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இங்கு என்னிடம் காட்டப்படும் மணி (எ) சுப்பிரமணி என்பவர் கொடுத்ததாக சொல்லும் ஒப்பதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இங்கு என்னிடம் காட்டப்படும் எதிரி ஸ்டாலின் என்பவர் கொடுத்ததாக சொல்லும் ஒப்பதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இங்கு என்னிடம் காட்டப்படும் எதிரி

அய்யப்பன் என்பவர் கொடுத்ததாக சொல்லும் ஒப்பதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இவ்வழக்கில் எதிரி ராமு எடுத்து ஒப்படைத்ததாக சொல்லும் இரும்பு அரிவாள் குறித்த அத்தாட்சியில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி அத்தாட்சியில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் எதிரி மணி எடுத்து ஒப்படைத்ததாக சொல்லும் இரும்பு கத்தி குறித்த அத்தாட்சியில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி அத்தாட்சியில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் **அ.சா.ஆ.**10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் எதிரி ஸ்டாலின் எடுத்து ஒப்படைத்ததாக சொல்லும் தனிக்கம்பு குறித்த அத்தாட்சியில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி அத்தாட்சியில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் **அ.சா.ஆ.**11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள் குறித்து போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. இவ்வழக்கில் ஏற்கனவே சமூகம் நீதிமன்றத்தில் மூல வழக்கு எண். 5/2005 ல் நான் இதே செய்திகளை தான் சொன்னேன். இது தவிர வேறு எதுவும் சொல்லவில்லை. (எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் அவர்களால் சாட்சி இவ்வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்று சொன்ன பின்பு நீதிமன்றத்தில் உள்ள ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் அத்தாட்சிகள் ஆகியவற்றை காண்பித்து முதல் விசாரணையில் அரசு தரப்பில் கேள்விகள் கேட்க உரிமை இல்லை என்று ஆட்சேபனை செய்யப்பட்டது. அது தீர்ப்புரையின்போது பரிசீலிக்கப்படும்.)

**நீதிமன்றக் கேள்வி :** அ.சா.ஆ.5 முதல் அ.சா.ஆ.11 வரை ஆவணங்களில் உள்ள சாட்சி கையொப்பங்களை எங்கு வைத்து எதற்காக போட்டேன் என்றால் காவல்துறையினர் கேட்டதால் கடையில் வைத்து நான் போட்டுக்கொடுத்தேன்.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அனுமதியின் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் இவ்வழக்கு தொடர்பாக என்னை விசாரித்த போது கடந்த 03.08.2000 ம் தேதி மதியம் 12.30 மணியளவில் நானும் நாட்டரசன்கோட்டை காசிவிஸ்வநாதன் என்ற என் நண்பரும் எங்கள் சொந்த வேலை காரணமாக காளையார்கோவில் போலிஸ் ஸ்டேசன் தெருவில் வடக்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது காளையார்கோவில் காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் ஆஜரில் இருந்த குற்ற எண்.333/2000 ல் தொடர்புடைய எதிரி ராமு (எ) ராமன் என்பவரை எங்கள் முன்னிலையில் விசாரிக்க அவர் வழக்கு சம்பவத்தை ஒத்துக்கொண்டு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நாங்கள் இருவரும் கையொப்பம் இட்டோம் என்றும் அதேபோல் அதை தொடர்ந்து இவ்வழக்கின் எதிரி மணி (எ) சுப்பிரமணி என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நாங்கள் இருவரும் கையொப்பம் இட்டோம் என்றும் மேலும் மாலை 15.45 மணியளவில் மற்ற எதிரிகளான ஸ்டாலின் மற்றும் அய்யப்பன் என்பவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களில் தனித்தனியாக கையொப்பம் இட்டோம் என்றும் அதைத்தொடர்ந்து போலிஸ் வாகனத்தில் மேற்குறிப்பிட்ட நபர்களை ஏற்றிக்கொண்டு எங்களையும் உடன் அழைத்துக்கொண்டு முத்துப்பட்டினம், காட்டுச்சூரை, இலுப்பக்கோட்டை, சூரவத்தி சென்று மண் ரோட்டில் உள்ள பிரிவு சாலையில் 500 அடி தொலைவில் அமைந்திருந்த புதரில் எதிரி ராமு எடுத்து ஒப்படைத்த அரிவாள் ஒன்றையும் அதைத்தொடர்ந்து மணி எடுத்து ஒப்படைத்த கத்தியையும் ஸ்டாலின் என்பவர் எடுத்து ஒப்படைத்த கம்பு ஒன்றையும் காவல் துறையினரிடம் மேற்குறிப்பிட்ட எதிரிகள் தனித்தனியாக எடுத்து ஒப்படைத்து அதை அத்தாட்சி மூலம் காவல் துறையினர் கைப்பற்றிய நிலையில் நானும் காசிவிஸ்வநாதனும் சாட்சிகளாக கையொப்பம் இட்டோம் என்றும் இதை காவல் துறையினர் விசாரணையிலும் விரிவாக சொல்லியுள்ள நிலையில் தற்சமயம் எதிரிகள் அனைவரும் பக்கத்து ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களுக்கு பயந்து கொண்டு உண்மையை மறைத்து பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

எங்களுடைய ஊருக்கும் ஒய்யவந்தான் பேச்சாத்தாங்குடி கிராமத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 15 கி.மீ. இருக்கும். நான் ஒப்புதல் வாக்குமூலங்களில் கையொப்பம் இட்டபோது காவல் நிலையம் செல்லவுமில்லை அங்கு வைத்து கையொப்பம் போடவுமில்லை என்றால் சரிதான். மேற்படி கையொப்பங்கள் அனைத்தையும் எங்கள் நண்பன் ஒய்யவந்தான் பேச்சாத்தாங்குடி கிராமத்தை சேர்ந்த குருபாதம் என்பவர் கேட்டுக்கொண்டதால் என் கடையில் வைத்து மேற்படி கையொப்பங்களை நான் போட்டேன். நான் மேற்படி கையொப்பங்களை போடும் போது நான் கையொப்பம் போட்ட அனைத்து ஆவணங்களிலும் என்ன எழுதப்பட்டிருந்தது என்பது எனக்கு தெரியாது. நான் கையொப்பம் போடும்போது எதிரிகள் யாரையும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். சூரவத்தி என்ற கிராமத்திற்கு காளையார்கோவில் காவல் துறையினருடனும் எதிரிகளுடனும் நான் செல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் ஆயுதங்கள் எதுவும் எடுத்துக்கொடுத்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆயுதங்கள் கைப்பற்றியதாக சொல்லப்படும் கைப்பற்றுதல் மகஜர்களில் நான் சூரவத்தியில் வைத்து எந்த கையொப்பங்களும் போடவில்லை என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை.</u>** இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.26 15:42:26 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை